John R. Sweney, 1837-1899



பாமாலை 450 இயேசுவின் அன்பில்

1 இயேசுவின் அன்பில் மூழ்கவும்
நேசத்தின் ஆழம் பார்க்கவும்
இன்னமும் தீரா வாஞ்சையே
என்னில் உண்டாகுகின்றதே.

பல்லவி

ஆட்கொண்டவர் நேசம்,
ஈடேற்றின் நேசம்,
இன்னும் மென்மேலும் வாஞ்சிப்பேன்;
உன்னத அன்பைப் போற்றுவேன்.

2 இயேசுவின் சொல்லும் சித்தமும்
ஆசையுள்ளோனாய் ச் செய்யவும்
தேவ ஒத்தாசை நம்புவேன்
ஆவியின் பேரில் சாருவேன்.

3 நாதரின் இன்ப ச் சத்தமும்
வேதத்தில் கேட்டு நித்தமும்
ஆத்தும நன்மை நாடுவேன்
நீதியின் பாதை செல்லுவேன்.

4 இயேசுவின் ராஜரீகமும்
அசுத்த மா செங்கோன்மையும்
விண்ணிலே தோன்றும் வண்ணமாய்
மண்ணிலுண்டாகும் மேன்மையாய்.